

# தமிழியல் ஆய்வு வரலாறும் வளர்ச்சிப் போக்குகளும்

## (தொகுதி - 1)


பதிப்பாசிரியர்

முனைவர் கோ. விசயராகவன்

முனைவர் மூ. கவிதா

முனைவர் நா. சுலோசனா



சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும்

சாத்தூர், ஸ்ரீ இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரியும்

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

# நூல் விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | தமிழியல் ஆய்வு வரலாறும் வளர்ச்சிப் போக்குகளும் (தொகுதி - 1) |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் கோ.விசயராகவன்<br>இயக்குநர் (மு.கூ.பொ)<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>சென்னை - 600 113.<br><br>முனைவர் மூ.கவிதா<br>உதவிப் பேராசிரியர்<br>தமிழ்த்துறை, ஸ்ரீ இராமசாமி நாயுடு<br>ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்.<br><br>முனைவர் நா.சுலோசனா<br>உதவிப் பேராசிரியர்<br>தமிழமொழி (ம) மொழியியல் புலம்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,<br>தரமணி, சென்னை - 113. |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,<br>இரண்டாம் முதன்மைச் சாலை,<br>தரமணி, சென்னை-600 113.<br>தொலைபேசி எண்: 044-22542992 |
| வெளியீட்டு எண் | : | |
| ISBN | : | 978-93-85165-37-5 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2018 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6கி.பி. டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 டம்மி |
| எழுத்தின் அளவு | : | 11 புள்ளிகள் |
| பக்க எண்ணிக்கை | : | xiv+364 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | ரூ. 470/- (ரூபாய் நாநூற்றி எழுபது மட்டும்) |
| அச்சகம் | : | நவநீதம் அச்சகம், சென்னை |
| பாடம் | : | ஆய்வுக் கட்டுரைகள் |

# பொருளடக்கம்


| வ. எ ண் | தலைப்பு | பக்க ம் எண் |
|---|---|---|
| 1. | குறிப்பு வினைகள் - அமைப்பும் வருகை முறையும்<br>**பேரா.சு.அழகேசன்** | 15 |
| 2. | புலமை இலக்கணம் உணர்த்தும் மாணவனின் செயல்பாடுகள்<br>**சு.அமித்ரா** | 19 |
| 3. | பொலன்னறுவைக் கால சிங்கள மன்னராட்சியில் இந்துசமயம்.<br>திருமதி. **அனித்தா சசிகரன்** | 24 |
| 4. | இளம்பூரணரும் சேனாவரையரும் ஓர் ஒப்பீட்டாய்வு<br>**முனைவர் சு.அனுசுயாதேவி** | 29 |
| 5. | தமிழகக் கல்வெட்டுக் களமும் பெயராய்வுகளும்<br>**முனைவர் ந.அருள்மொழி** | 32 |
| 6. | மாமறை பேசுகிறது - ஒரு பன்முக ஆய்வு<br>**முனைவர் நயம்பு. அறிவுடைநம்பி** | 36 |
| 7. | பண்பாட்டு மானிடவியல் நோக்கில் பத்துப்பாட்டு<br>**ப.அருணாதேவி** | 40 |
| 8. | நீரின்று அமையாது உலகு<br>**முனைவர் அலெக்சு தேவராசு சேன்மார்க்** | 43 |
| 9. | விழிப்புணர்வுத் தகவல்களை கிராம மக்களுக்குத் தெரிவிப்பதற்கான ஆற்றல் வாய்ந்த தகவல் தொடர்புச் சாதனங்கள் - மாதிரி ஆய்வு<br>**முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி** | 57 |
| 10. | தமிழர்களின் வாழ்வியலில் பனை - இலக்கியங்கள் ஊடான பார்வை<br>**பேராசிரியர் க.அருந்தவராஜா**<br>**சி.மங்களரூபி** | 60 |
| 11. | சிலப்பதிகாரம் மார்க்சீய அணுகுமுறை:<br>(மார்க்சீயக் கோட்பாடும், மார்க்சீயத் தத்துவமும்)<br>***திருமதி இரா. ஆன்றோ பியோ எழில்*** | 65 |
| 12. | **சங்ககாலகுறிஞ்சிநிலமக்களும் இக்காலமலையாளிபழங்குடிகளும்**<br>**ச.ஆசைக்கண்ணு** | 69 |
| 13. | ஈழக்கவிதை – பன்முகப்பார்வை<br>**ஜோ. இளங்கோவன்** | 73 |
| 14. | ஒப்பாய்வுத் தெளிவுகள்<br>**பேரா.முனைவர் திருக்குறள் இலலிதா சுந்தரம்** | 77 |
| 15. | **இரா.அறவேந்தனின் குறுந்தொகை-பதிப்பு வரலாறு**<br>(1915- 2010) **கா.இராஜகணபதி** | 82 |
| 16. | தமிழ் இதழ்களில் கருத்துப் படங்களின் வளர்ச்சிப்போக்கு – ஓர் ஆய்வு<br>**முனைவர் சு. இரகுநாதன்** | 89 |
| 17. | லேனாதமிழ்வாணனின் இலக்கியப்பணி<br>**முனைவர்பொ.இராமநாதன்,** | 93 |
| 18. | பழந்தமிழர் வாழ்வில் அறக்கோட்பாடுகள்<br>**முனைவர்.சு.ஈஸ்வரி** | 96 |
| 19. | **கையறுநிலைப் பாடல்களும் வாய்மொழி இலக்கியங்களும்**<br>**உமா சங்கரி . பா** | 99 |
| 20. | வேடிக்கை மனிதர்கள் காட்டும் சமுதாய வாழ்வியல்<br>**தி.உமா மகேஸ்வரி** | 105 |

# விழிப்புணர்வுத் தகவல்களை கிராம மக்களுக்குத் தெரிவிப்பதற்கான ஆற்றல் வாய்ந்த தகவல் தொடர்புச் சாதனங்கள் - மாதிரி ஆய்வு (விருதுநகர் மாவட்டம் - சாத்தூர் வட்டம்)

**முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி**
**உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்**
**பாத்திமா கல்லூரி மதுரை.**

நமது இந்திய நாடு மிகப் பெரிய நிலப்பரப்பையும் பல கோடி மக்களையும் கொண்டுள்ளது. நமது சமுதாய வாழ்க்கை நகர்ப்புறம், கிராமம் (ஊரகம்) என்ற அடிப்படைக் கூறுகளைக் கொண்டுள்ளது. இந்தியாவில் வாழும் பெரும்பகுதி மக்கள் கிராமங்களிலும், சிறு நகரங்களிலும் வசிக்கின்றனர். இந்தியாவின் உயிர்நாடியாக விளங்கும் கிராமங்களில் வாழும் மக்களில் பெரும்பகுதியினர் ஏழ்மையில் சிக்கித் தவிக்கின்றனர். போதுமான வேலைவாய்ப்புக்களும் வருமானமும் இல்லை. பழமையான சிந்தனைகளும் மூடப் பழக்கவழக்கங்களும் மலிந்து கிடக்கும் இவர்களிடம் போதிய கல்வியறிவு இல்லை. அறியாமை இருளிலிருந்து கிராமங்களை மீட்கக் கிராமப்புற மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். அதுவும் ஆற்றல் வாய்ந்த தகவல் தொடர்புச் சாதனங்கள் மூலம் இவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

## ஆய்வுப் பொருள்

வளர்ந்த நாடுகளுக்கு இணையாக, நமது நாடும், தகவல் தொடர்பில் முன்னேறியுள்ளது. அவ்வாறு முன்னேறி இருந்தாலும், நம்நாட்டில் ஏறக்குறைய 70 விழுக்காட்டினர் கிராமங்களில் வாழ்கின்றனர். கிராம மக்களின் வேளாண்மை, சுற்றுச்சூழல், உடல்நலம், கல்வி ஆகியவற்றில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குத் தகவல் தொடர்புச் சாதனங்களின் தொடர்பியல் பணி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இத்தகைய சீரிய பணியாற்றும் தொடர்புச் சாதனங்கள், தாம் தெரிவிக்கின்ற தகவல்கள் மூலம் கிராம மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. இங்ஙனமான, தகவல் தெரிவிப்பில் திறம் வாய்ந்த தொடர்புச் சாதனங்களை இனங்கண்டறிதற் பொருட்டு, **“விழிப்புணர்வுத் தகவல்களை கிராம மக்களுக்குத் தெரிவிப்பதற்கான ஆற்றல் வாய்ந்த தகவல் தொடர்புச் சாதனங்கள் - மாதிரி ஆய்வு (விருதுநகர் மாவட்டம் - சாத்தூர் வட்டம்)”** என்பது ஆய்வுப் பொருளாகக் கொள்ளப்பட்டுள்ளது.

## 1.2 ஆய்வு உந்துதல்

இந்திய அரசு தேசிய மேம்பாட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்துகின்ற காலகட்டங்களில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியிலும் கவனம் செலுத்தி, அதற்காகக் கணிசமான நிதியையும் ஒதுக்கீடு செய்கின்றது. தேசிய மேம்பாடும் தகவல் தொடர்பும் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய காரணிகளாகக் கருதப்படுகின்ற காரணத்தால், தொடர்புச் சாதனங்கள் பெருகி வருகின்ற இன்றைய சூழலில் கிராம மக்களின் விழிப்புணர்வில் அவை செலுத்துகின்ற பங்கை அளவீடு செய்து அவற்றின் திறன்களைச் சோதித்து அறிவது இன்றியமையாததாகின்றது. இத்தகைய ஆய்வுகள், தமிழ் ஆய்வுலகில் அரிதாகவே மேற்கொள்ளப்பட்டுள்ள காரணத்தால் அவ்வகையிலான ஆய்வினை மேற்கொள்ள வேண்டும் என்ற விருப்பமே இவ் ஆய்விற்கு அடிப்படை உந்துதலாக அமைந்துள்ளது.

## 1.3 ஆய்வு நோக்கம்

உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் தெரிவிப்பதில் தகவல் தொடர்புச் சாதனங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. **“விழிப்புணர்வுத் தகவல்களை கிராம மக்களுக்குத் தெரிவிப்பதற்கான ஆற்றல் வாய்ந்த தகவல் தொடர்புச் சாதனங்கள் - மாதிரி ஆய்வு (விருதுநகர் மாவட்டம் - சாத்தூர் வட்டம்)”** என்ற பொருளில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த ஆய்வில் மரபுவழிச் சாதனங்கள், அச்சுவழிச் சாதனங்கள், மின்னணுவழிச் சாதனங்கள், நவீன சாதனங்கள் ஆகியவை எந்தெந்த விழிப்புணர்வுத் தகவல்களை எவ்வகை முறைகளில் கிராம மக்களுக்குத் தெரிவிக்கின்றன, இவற்றுள் விழிப்புணர்வுத் தகவல்களைத் திறம்படத் தெரிவிக்கும் ஆற்றல் வாய்ந்த சாதனங்கள் எவை என்பன பற்றி ஆய்ந்தறிவது இவ் ஆய்வின் நோக்கம் ஆகும்.

## 1.4 ஆய்வு எல்லை